சினிமா கோயில்கள் விளையாட்டு என்.ஆர்.ஐ கல்விமலர் புத்தகங்கள் iPaper Subscription

DINAMALAR
National Tamil Daily

Advertisement

செய்திகள் தினம் தினம் வாராவாரம் ஆன்மிகம் போட்டோ வீடியோ ஸ்பெஷல் மற்றவை


"பார்முலா ஒன்" ரேஸ் மின் கார்: உருவாக்கி சென்னை ... 2


சேலம் நீதிமன்றத்தில் சீமான் ஆஜர் 2


திருமணம் செய்து வைக்காததால் ஆத்திரம்: தாய், தந்தையை ... 2

சிறப்பு பகுதிகள் சொல்கிறார்கள்

# சொல்கிறார்கள்

Added : டிச 17, 2015 22:03 | கருத்துகள் (2) | FOLLOW US ON Google News |

You May Like Sponsored Links by Taboola

- My Son Will Die Of Rare Cancer, If He Doesn't Receive Help. Save Him (Ketto)
- A Fantastic Getaway to Vietnam's Cultural Heart (Our Better World)
- Has this international organisation's finally been exposed?(Inquisitr)
- 2 & 3 BHK Apartments Near Perungalathur @ 63 Lakh* Onwards (TVS Emerald)
- 2nd income chance for Indians. (SurveyMonthly)

Follow Us :

Advertisement

Advertisement



ADVERTISEMENT

Advertisement




You May Like Sponsored Links by Taboola

The Visually Impaired Chefs Empowered To Cook With Purpose

Our Better World Learn More




2
Colors

**'ப்ரெண்டு ரிக்வஸ்ட்'டை கவனமுடன் கையாளுங்கள்!**

சமூக வலைதளங்களில் பெண்கள் சந்திக்கும் பிரச்னை குறித்து கூறும், சென்னை, 'காம்கேர் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட்' உரிமையாளரும், எழுத்தாளருமான காம்கேர் கே.புவனேஸ்வரி: வெள்ள நிவாரண சம்பவத்தில் மட்டுமல்ல, 'பேஸ்புக், டுவிட்டர்' என, சமூக வலை தளங்களில் சுதந்திரமாக இயங்க நினைக்கும் பெண்கள், வக்கிர ஆண்களின் தாக்குதல்களுக்கு ஆளாகி வருவது தொடர்கதை ஆகிறது. சமூக வலைதளங்களில் பல துறைகள் சார்ந்த பெண்களின் பயனுள்ள பதிவுகள், உதவிக் குறிப்புகள், சமூக அக்கறை, சளைக்காத தைரியமெல்லாம் பாராட்டுகளுக்கு உரியவை. ஆனால், துடிப்புடன் செயல்படும் பெண்களின் பதிவுகள், ஆணாதிக்கர்களை தொந்தரவு செய்கின்றன.
குறிப்பாக, தான் விரும்பிய, தன் புகைப்படத்தை ஒரு பெண் பதிவிட்டால் கூட, 'அப்போ இவளுக்கு மெசேஜ் அனுப்பலாம்' என்ற மனக்கோளாறு, ஆண்கள் பலருக்கு ஏற்பட்டு விடுகிறது. இன்னும் சிலர், ஆபாச மெசேஜ்கள், படங்கள் என அனுப்ப கிளம்பி விடுகின்றனர்.

மேலும், 21ம் நுாற்றாண்டில், '4ஜி' நெட்டில், இணைய வெளியில் ஒரு பெண்ணை எதிர்கொள்ளும் போதும், அவளை பெண் என்ற உடலாக மட்டுமே எதிர்கொள்வது தான், ஆண் சமூகத்தின் அராஜகம், அவலம்.
அதிலும், ஒரு முக்கிய சமூக பணியின் அவசர தேவைக்காக, தங்கள் தொடர்பு எண்ணை பதிவிட்ட பெண்களுக்கு, அந்த எண்ணில் தொந்தரவு கொடுப்பது சகிக்க முடியாதது; மன்னிக்க முடியாதது.
இணைய வெளிக்கு வராத பெண்கள், இனிவரும் யுகத்தில் இருக்கப் போவதில்லை. இந்த அநாகரிக ஆண்களின் வீட்டில் இருந்தும் நாளை, அவர்களின் தங்கையோ, பெண்ணோ பேஸ்புக், டுவிட்டருக்கு வரலாம். அவர்களும் மற்ற ஆண்களால் இப்படித்தான் அணுகப்படுவர் என்பதை, சம்பந்தப்பட்டவர் உணர வேண்டும்.
எனினும் பெண்கள், 'பேஸ்புக், வாட்ஸ் - ஆப்'பில் முடிந்தவரை புகைப்படம் பதிவதை தவிர்க்கலாம். மீறி பதிந்தாலும் நட்பில் உள்ளவர்கள் மட்டுமே பார்க்கும் விதமாக செட்டிங்சை பலப்படுத்த வேண்டும்.
பொதுவாக, 5, 10 நண்பர்களிடமே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு எனும்போது, 5,000 நண்பர்களை, அதிலும் நேரடியாக அறியாதவர்களை நண்பர்களாக கொள்ளும்போது, பிரச்னைகளும் பெருகும். எனவே, 'ப்ரெண்டு ரிக்வஸ்ட்'டை அனுமதிக்கும் போதே, கவனத்துடன், 'பில்டர்' செய்துவிடுவது நல்லது.சமூக வலைதளங்களில் வீணர்களின் வீண் வம்புகளுக்கு பதில் சொல்லாமல், வெட்டிப் பேச்சுகளில கலந்து கொள்ளாமல், தரம் குலைக்கும் உரையாடல்களுக்கு இடம் கொடுக்காமல் இருப்பது என, தேவையற்றவைகளை தவிர்க்கலாம். திறமையை வளர்த்துக் கொள்ளவும், தொழிலை விரிவுபடுத்தவும், வேலையில் முன்னேறவும், சமூக சேவைகளுக்கும் பயன்படுத்தலாம்; நேரத்தையும், உழைப்பையும் சேமிக்கலாம்.

YOUTUBE & TELEGRAM

Advertisement




Paving the Way for Success in STEM
Health Tech @ Abbott

Small, yet powerful: Try these hearing aids in-store
Hear.com

Invest In High Yield AAA Corporate Bonds
GoldenPi
Sign Up

Advertisement




Dinamalar - World's No ...
3,743,400 followers
Follow Page
Use app

அதிகம் படித்தவை